**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**

**முன்னிலை திரு.S. ராஜேஷ் கண்ணன், பி.ஏ., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்-III , தஞ்சாவூர்,**

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு (மு.கூ.பொ)**

**2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**சி.ஆர்.எம்.பி.எண்.288/2026**

செல்வகுமார், வயது 47/2026
த/பெ. கலியபெருமாள் ... மனுதாரர்/எதிரி

/ எதிர் /

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
மருவூர் காவல் நிலையம்,
குற்ற எண்.94/2026
U/s. 296(b), 132, 351(2) of BNS &
4 TNPHW Act ... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.P. வீரசேகரன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், வாதுரை கேட்டும், அரசு தரப்பு ஆட்சேபனை பரிசீலனை செய்தும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

1. மனுதாரர்/எதிரி பிரிவு 480 BNSS-ன் கீழ் பிணை கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2. கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. மனுதாரர் அப்பாவி. அரசு தரப்பில் சொல்லப்படுவதுபோல், மனுதாரர் எந்த குற்ற செயலும் செய்யவில்லை. மனுதாரருக்கு நிலையான முகவரி உள்ளது. மனுதாரருக்கு பிணை வழங்கும் பட்சத்தில் பிணைக்கு உரிய ஜாமின்தாரர் வழங்கவும், இந்நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கவும், மனுதாரர் தயாராக இருக்கிறார். வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு CC No.151/2026 என கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் சிறையில் இருந்து வரும் காலத்தை

RAJESH KANNAN
Digitally signed by RAJESH KANNAN
Date: 2026.07.07 18:23:42 +1200

கருத்தில் கொண்டு அவருக்கு பிணை வழங்க வேண்டும் என்று வாதுரைத்தார்.

3. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபனை குறிப்பில், மனுதாரருக்கு பிணை வழங்கினால் அவர் தொடர்ந்து இது போன்ற குற்ற வழக்குகளில் ஈடுபடுவார் என்பதாலும், தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜராக மாட்டார் என்பதாலும், சாட்சிகளை மிரட்டி அச்சுறுத்தக்கூடும் என்பதாலும், இவ்வழக்கு சாட்சிகளை கலைக்க முயற்சிப்பார் என்பதாலும், மனுதாரர்களுக்கு பிணை வழங்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. வழக்கு ஆவணங்கள் பரிசீலணை செய்து பார்க்கப்பட்டது. மனுதாரர் கடந்த 23.06.2026 முதல் 15 நாட்களாக சிறையில் இருந்து வருகிறார். மனுதாரர் மீது, அவருக்கு அழைப்பாணை சார்வு செய்ய சென்ற நீதிமன்ற ஊழியரை பணி செய்யவிடாமல் தடுத்து, அவரை அசிங்கமாக பேசி, அவமரியாதை செய்ததாக குற்ற சங்கதி சொல்லப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபர் அரசு ஊழியராக தனது பணியை செய்யும் பொருட்டே மனுதாரரை சென்று பார்த்துள்ளார். அவ்வாறு உள்ளபோது, மனுதாரர் தனக்குரிய அழைப்பாணையை பெற்றுக்கொள்ளாமல், பாதிக்கப்ட்ட நபரை அவமரியாதை செய்து, அவரது அரசு பணியை செய்யவிடாமல் செய்ததாக சொல்வது கொடுங்குற்றமாக உள்ளது. மனுதாரருக்கு தற்போது பிணை வழங்கினால் அது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

5. முடிவாக, மேலே விவாதிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில், மனுதாரர் மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7-ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJESH KANNAN

Digitally signed by RAJESH KANNAN
Date: 2026.07.07 18:23:49 +1200

நீதித்துறை நடுவர் ,

திருவையாறு.(முகூபொ)